පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
பேராதனைப் பல்கலைக்கழகம்
UNIVERSITY OF PERADENIYA

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
தொடர் தொலைக் கல்வி நிலையம்
CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

ශාස්ත්‍රවේදී සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර) - 2016 අගෝස්තු
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி) - 2016 ஆகஸ்ட்
GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) – AUGUST 2016

# மெய்யியல்
## மேற்கத்தேய மெய்யியல் - ( PHG IV)

இவ்வினாத்தாளில் எல்லாமாக பத்து ( 10) வினாக்கள் காணப்படுகின்றன. எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
எழுத்து தெளிவில்லாவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
நேரம் - மூன்று மணித்தியாலம்.

---

01. "பகுத்தறிவின் ஆதரவுடன் பிரபஞ்சம் பற்றிய இயற்கையான விளக்கத்தை வழங்கியதன் காரணமாகவே மைலீஸியாவைச் சேர்ந்த தேலிஸ் முதல் மெய்யியல் சிந்தனையாளராகக் கருதப்படுகிறார்". இந்தக் கூற்றை நீர் ஏற்றுக் கொள்கிறீரா?

02. மனிதப் பெறுமானங்கள் தொடர்பான சோக்ரடீஸின் ஒழுக்கவியல் நோக்கினைப் பற்றி ஒரு கருத்துரை தருக.

03. "அனுபவ உலகத்தைச் சாராது, கருத்து நிலைப் பொருட்கள் சுதந்திரமாகக் காணப்படுகின்றன. சாதாரணமான பொருட்கள் பூரணமற்றவை, மாறக்கூடியவை. ஆனால், அவை பரிபூரணமான மாற்றமடையாத வடிவத்தின் மங்கலான பிரதிகளாகும்"இந்தக் கூற்றின் ஒளியில் பிளட்டோனிய கருத்துலகினை நீர் எவ்வாறு பகுப்பாய்வு செய்வீர்?

04 மத்திய கால மெய்யியலில் நீர் காணும் சிறப்புப் பண்புகள் எவை?

05. கடவுள் எண்ணக்கருவை நீர் எவ்வாறு விளக்குவீர் அத்துடன் தோமஸ் அக்வைனாஸின் கடவுள் இருப்புப் பற்றிய நிரூபணங்களைப் பரிசீலனை செய்க.

06. 'அதிகாரத்திற்கும், மரபுவாதத்திற்கும் எதிரான புரட்சியும் சுதந்திர சிந்தனைக்கான கோரிக்கையும் தான் நவீன யுகத்தின் வரலாறாக நோக்கப்படுகின்றது' இக் கூற்றினை நீர் ஏற்கின்றீரா?

07. " நான் சிந்திக்கின்றேன். ஆகவே நான் இருக்கின்றேன்." என்ற டேக்கார்டின் கோரிக்கையின் முக்கியத்துவம் என்ன? அக்கோரிக்கைக்காக அவர் எவ்வாறு வாதிடுகிறார்.

08. (அ) தர்க்க அணுவாதம் என்ற பதத்தின் பொருள் என்ன?

(ஆ) 'பொதுவாக ட்ரெக்ட்டேடஸ் தர்க்க அணுவாதம் என்றே குறிப்பிடுகின்றது. விட்கன்ஸ்டைனின் அணுவாதம் ரஸலின் அணுவாதத்துடன் பொருந்திச் சென்றாலும் இருவரினதும் கண்ணோக்குகளும் சமமானதல்ல' கருத்துரைக்குக.

........ 02

09. **<u>ஒன்றில்</u>**

விமர்சனப் பகுப்பாய்வு மெய்யியலுக்குக் காண்டின் பங்களிப்பு என்ன?

**<u>அல்லது</u>**

வரலாற்றுப் பொருள்முதல்வாதம் பற்றிய கார்ள் மார்க்ஸின் நோக்குகளை ஆராய்க.

10. **<u>ஒன்றில்</u>**

பிந்திய விட்கன்ஸ்டைன் தனது ' மெய்யியல் ஆய்வு' ( நூலில் ) விபரிக்கும் பிரதான கோட்பாடுகள் எவை?

**<u>அல்லது</u>**

பின்வருவனவற்றுள் ஏதேனும் **<u>மூன்றிற்குச்</u>** சிறு குறிப்புக்கள் தருக.

(i) இருப்பு வாதம்

(ii) அனுபவவாதம்

(iii) பகுத்தறிவும் நம்பிக்கையும்

(iv) டேக்கார்ட்டும் லொக்கும்

(v) அந்நியமாதல் **<u>அல்லது</u>** தோற்றப்பாட்டியல்